1990 ஏப்ரல் 10]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வத்தலக்குண்டு மலையையொட்டி கீழே யிருக்கிறது. மலையிலே ஆக்சிடென்ட்டான கேஸ்கள், கொடைக்கானல் மலைப் பகுதியிலே அந்த இருதய நோய்ப் பட்டவர்களை, இங்கே கீழே எடுத்துக்கொண்டு வருவதற்கு மிகவும் சிரமம் அடைகிறார்கள். மதுரைக்குக் கொண்டு வருவதற்குள்ளாக அந்த உயிரே போய்விடுகிறது. ஆகையி னாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீல னைக்கு எடுத்துக் கொண்டு, இந்த முக்கியமான விஷயத்தை ஆராய்ந்து அங்கே மறுபடியும் அதை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வ சிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதெல் லாம் இருதயப் பிரிவு சிகிச்சை முறைகள் மாவட்டத் தலை நகரங்களிலே மட்டுமே கொடுக்கப்பட்டு வருகின்றன. இப்போது மதுரை மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டதால், தாலுகா மருத்துவ மனையாக இருந்த பெரியகுளம் அரசு மருத்துவமனை மாவட்ட தலைமை மருத்துவ மனையாக உயர்த்தப் பட்டது. ஆகவே, முதலிலே பெரியகுளத்திலே இது போன்ற வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான கருத்துரு இப்போது அரசுக்கு வந்துள்ளது. ஆகவே மாவட்டத் தலை நகரங்களில் மட்டுமே இப்போது செய்கின்ற செயற்குறிப்பு அரசிடம் உள்ளது. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை இப்போது இருக்கிற நிதிநிலையில் செய்ய முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளத்தை மதுரை ஜில்லாவோடு இணைத்து விட்டார்கள். நாங்களோ திண்டுக்கல்-காயிதே மில்லத் ஜில்லா விலே இருந்து கொண்டு இருக்கிறோம். ஆகையினாலே, திண்டுக்கல் ஜில்லாவிலே இருக்கிற எங்களுக்கு அந்தப் பகுதி யிலே வரக்கூடிய அந்த ஏழைகள் பாதிக்கப்படுகின்ற காரணத் தால்—இதற்கு ஒன்றும் அதிகமாகச் செலவில்லை—ஆகையி னாலே இங்கே முதலமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள்— ஆகையினாலே அதிகம் செலவு இல்லாத அளவிற்கு இந்த மனநோய், அதாவது இருதய நோய்ச் சிகிச்சைப் பிரிவை மறுபரிசிலனை செய்து ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.